1

# சிறப்பு வழிபாட்டு முறை - கொடைவிழா



**முனைவர் க. கலாவதி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்*
*மகளிர் உயர்கல்வி நிறுவனம்*
*கோயமுத்தூர் - 43.*

மனிதன் தன் நன்றியுணர்வைத் தான் வழிபடும் தெய்வங்களுக்கு விழாக்கள் மூலம் தெரிவித்தான் தெய்வங்களுக்குக் குறிப்பிட்ட பருவங்களில் விழவெடுத்து மகிழ்ந்தான். தன் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் தெய்வத்தால் நிகழ்கிறது, நிறைவேறுகிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தெய்வத்திற்கு நன்றிக்கடன் செலுத்தும் முயற்சியே விழாவாகும். தன் வாழ்வு என்றும் சிறக்க வேண்டும் என்னும் சிந்தனையுடனேயே விழா அமைகின்றது. பொதுவாக வழிபடும் முறை அனைத்து மக்களிடமும் காணப்பட்டாலும் அம்மக்கள் வாழுகின்ற ஊர்களுக்கும் வழிபடுகின்ற தெய்வங்களுக்கும் ஏற்ப வழிபாட்டுமுறைகளும் வேறுபட்டு இருப்பதை நடைமுறை வாழ்கையில் காணமுடிகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் சிறுதெய்வங்களுக்கு நிகழ்தப்பெறும் விழா ‘கொடை’ என்று அழைக்கப்படுகின்றது. அம்மன் போன்ற சாந்தமான தெய்வங்களுக்கு திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் சுடலை, மாசானமுத்து, பலவேசம், இசக்கியம்மன் போன்ற துடிப்பான தெய்வங்களுக்கு வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களும் கொடை நடைபெறுகிறது. சமாதித் தெய்வம், இல்லுறைத் தெய்வம், சுமை தாங்கிக்கல் போன்ற தெய்வங்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை சிறப்பு வழிபாடு நடத்தப்படுகின்றது.

## கொடைவிழாக் கட்டமைப்பு

சமுதாயத்தில் மகிழ்ச்சியின் வெளியீட்டுக் கூறுகளாக விழாக்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்கள் சமயத் தொடர்பானவை, சமுகத் தொடர்பானவை, அரசு தொடர்பானவை என மூவகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் சமயத் தொடர்பானவை விழாக்கள். நெல்லை மாவட்டத்தில் சிறுதெய்வ விழா, பெருந்தெய்வ விழா, குலதெய்வ விழா, பொதுதெய்வ விழா என ஐந்து வகைகளில் நடைபெறுவதைக் கள ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. இவ்விழாக்கள் கிராமத்திற்குக் கிராமம், இனத்திற்கு இனம் மாறுபடுகின்றன.

- விழா எடுக்கின்ற மக்களின் சமூக வரலாற்றுப் பின்னணி
- இன அமைப்புக்களின் தாக்கம்
- பொருளாதார நிலை
- பண்பாட்டு அடிப்படை
- முன்னோர்கள் செய்ததை வழிவழியாகப் பின்பற்றுதல்.

ஆகியவை இம்மாறுபாட்டிற்குரிய அடிப்படைக் காரணங்களா காணப்படுகின்றன. இம்மாற்றங்கள் பெரும்பாலும் விழாவின் மை பகுதியான நிகழ்சிகளில் மட்டுமே காணப்படுகின்றது. குறிப்பாக, இ அமைப்புகளின் தாக்கத்தினால் உண்டாகும் மாறுபாடு வி நிகழ்ச்சியின்போது நடைபெறுகின்ற பூசை, படையல், பலியி போன்றவற்றில் மட்டுமே காணப்படுகின்றது.

கொடை ஆண்டிற்கு ஒருமுறையோ, பல ஆண்டுகளுக் ஒருமுறையோ நடைபெறுவது உண்டு. குறிப்பிட்ட ஒரு தெய்வத்திற் சில குடும்பங்கள் மட்டுமே வரி கொடுப்பதாலும், ஒரு கொ நடைப்பெறுவதற்குப் பல ஆயிரம் ரூபாய் தேவைப்படுவதாலு அடிக்கடி கொடை நடத்த முடிவதில்லை. எனவே அதிக வரிக் உள்ள கோயில்களுக்கும், வருமானம் உள்ள கோயில்களுக்கு மட்டுமே ஆண்டுதோறும் கொடைவிழா நடைபெறுகின்றது.

**கொடை விழா**

| கொடைவிழாவின் மையப்பகுதி | கொடைவிழாவின் முடிவுப்பகுதி | கொடைவிழாவின் தொடக்கம் |
|---|---|---|
| துடிப்பான தெய்வங்கள் | வெள்ளி | சனி காலை |
| வியாழன் மாலை | | |
| சாந்தமான தெய்வங்கள் | செவ்வாய் | புதன் காலை |
| திங்கள் மாலை | | |

## கொடைவிழாவினை உறுதி செய்தல்

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வோராண்டும் கொடைவிழா நடைபெறும் மாதத்தின் தொடக்கத்தில் ஊர்ப் பெரியவர்கள் ஒன்று கூடி கொடை விழாவை எப்போது நடத்தலாம் என்பது பற்றிப் பேசி முடிவுசெய்வர். அம்முடிவை மக்களுக்குத் அறிவிப்பர். இவ்வறிவிப்பு கிராமத்திற்குக் கிராமம் வேறுபட்டாலும் கீழ்க்காணும் அமைப்பிற்குள்ளேயே அடங்கும்.



**கொடை விழா**

- ஊர்க்கூட்டம்
- உத்தரவு கேட்டல்
- நாள்பார்த்தல்
- கால்நடுதல்
- அழைப்பிதழ் அச்சடித்தல்

## ஊர்க்கூட்டம்

சிறுதெய்வங்கள் பொதுவாக குலதெய்வமாகவோ அல்லது இனத்தெய்வமாகவோ இருப்பதால் அந்தந்த தெய்வத்திற்குரிய பெரிய சாமியாடி மற்றும் குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் இரவில் கோயிலில் ஒன்று கூடுவர். இதனை ஊர்க்கூட்டம் என்றழைக்கின்றனர். அக்கூட்டத்தில் அனைவரும் கலந்து பேசி முடிவுக்கு வருவர். கோடை விழா நடைபெறவிருக்கும் மாதம், நாள் போன்றவை உறுதி செய்யப்படும். இக்கூட்டத்தில் ஒரு குடும்பம் கொடுக்க வேண்டிய வரிப்பணம், கோயிலுக்குச் செய்ய வேண்டிய செயல்கள் ஆகியவற்றை முடிவு செய்வர். பின்னர் செயல்கள் ஆகியவற்றை முடிவு செய்வர். பின்னர் கொடை நிகழ்சிகளுக்கான வேலைகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் பொறுப்புகள் ஒப்படைக்கப் படுகின்றன. இவ்வூர்க்கூட்டம் நடைபெறுவதிலிருந்து கொடைவிழா தொடங்குவதற்குரிய நாள்வரை இடையிலுள்ள நாட்களின் எண்ணிக்கை கிராமத்திற்குக் கிராமம் வேறுபடுகின்றன.

## நாள் பார்த்தல்

கொடைவிழா கொண்டாடப்படுவது உறுதியானவுடன் நாள் பார்த்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கொடைவிழா, வளர்பிறையில் தொடங்குவதாகவோ அல்லது பௌர்ணமியில் நிறைவுறுவதாகவோ முடிவு செய்கின்றனர். கொடை விழா வியாழன், வெள்ளி, சனி அல்லது திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களில் நடத்துவதாக உறுதி செய்கின்றனர்.

## கால்நடுதல்

ஆய்வுக் களத்திற்குட்பட்டு அமைந்திருக்கும் அனைத்துக் கோயில்களிலும் கொடை தொடங்குவதற்கு எட்டு நாட்களுக்கு முன்பாக வரி எழுதிய பின்பு கால்நடுதல் நடைபெறுகின்றது. கோயிலின் முன்பு ஒன்று அல்லது ஒன்றரை அடி ஆழத்திற்கு ஒரு குழிதோண்டி அக்குழியில் பால், பன்னீர் ஊற்றி சந்தனம், குங்குமம் முதலியன இட்டு தேங்காய் உடைத்து பூசை செய்து, மா, ஆல் அல்லது அரச மரங்களின் கிளைகளில் ஏதாவது ஒன்றை அதில் நட்டு வைத்து கிளையின் நுனிப் பகுதியில் மாவிலையைக் கட்டி, பிச்சிப்பூ மாலை அணிவித்து, சந்தனம், குங்குமம் ஆகியவை வைத்து வணங்குவர். இதனையே 'கால் நடுதல்' என்று கிராமத்து மக்கள் கூறுகின்றனர். கொடைவிழா உறுதி செய்யப்பட்டுவிட்டது என்று ஊர் மக்களுக்கு அறிவிக்கவும், கோமரத்தடியில் விரதங்களைக் கடைப்பிடிக்கவும் இந்நிகழ்ச்சி குறியீட்டுப் பொருளாக இவ்வட்டாரத்து மக்களால் பயன்படுத்தப்படுகிறது.

## அழைப்பிதழ் அச்சடித்தல்

கொடைவிழாவிற்குரிய நாள் உறுதி செய்யப்பட்டவுடன் இச்செய்தியினை வரிக்காரர்களும், ஏனையோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு அழைப்பிதழ் அச்சடிக்கப்படுகின்றது. கொடைவிழா எந்த நாளில் தொடங்கி எந்த நாளில் முடிகின்றது என்பது அழைப்பிதழில் இடம் பெற்றிருக்கும். அதுபோல் ஒவ்வொரு நாளும் நடைபெறும் ஆன்மீக நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் பற்றிய விபரம் அடங்கியிருக்கும்.

ஊர் இளைஞர்கள் தங்கள் மன்றங்களின் பெயரிட்டு பெரிய சுவரொட்டிகளை அச்சடித்து தங்கள் ஊரில் மட்டுமல்லாமல் பக்கத்து கிராமங்களிலும் விளம்பரங்கள் செய்கின்றனர். இதனால் பக்கத்து கிராம மக்களும் இக்கொடை விழாவினைக் கண்டு மகிழ வாய்ப்பு ஏற்படுகிறது. அழைப்பிதழ் அச்சடிக்காத நிலையில் வெளியூர்களில் வாழும் இக்குலத்தவருக்கு நான்கு மூலைகளிலும் மஞ்சள், குங்குமம் தடவப்பட்ட அஞ்சல் அட்டையில் கொடை விழா பற்றிய செய்தி தெரிவிக்கப்படுவதும், செய்தி அறிந்தவுடன் அவர்கள் தங்களுக்குரிய வரிப்பணத்தைப் பணவிடை மூலம் அனுப்பி வைப்பதும் வழக்கமாக உள்ளது.


## கொடை விழாவை நடத்தும் பாங்கு

கொடை விழாவை உறுதி செய்து அதற்கான நாள் குறித்தபின்பு கொடை விழாவிற்கான செயல்பாடுகளில் இறங்குகிறார்கள். இச்செயல்பாடுகள் கொடை விழாவிற்கான செயல்பாடுகள், கொடை விழாவை முன்னிட்டு நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கான செயல்பாடுகள் ஆகிய இரண்டு நிலைகளில் அமைகின்றன.

## கொடை விழாவிற்கான செயல்பாடுகள்

### வரி எழுதுதல்

கொடை நடைபெறுவற்கு முன்பாக வரி எழுதுதல் நடைபெறுகிறது. விழாவிற்கான மொத்தச் செலவினையும் அந்தந்த இன அல்லது இன மக்களே ஏற்றுக்கொள்வதல் செலவினை ஈடு செய்வதற்காக வரியை உறுதி செய்கிறார்கள். கோடை விழாவிற்குச் செலவாகும் நிதியை நிர்ணயம் செய்து அதற்கேற்றவாறு வரிப்பணம் முடிவு செய்யப்படுகிறது. இவ்வரி நான்கு நிலைகளில் அமைகிறது.




பொதுவாக ஒரு கோயில் எந்த இன மக்களுக்குச் சொந்தமோ அந்த இன மக்களே தங்களுக்குள் தலைக்கட்டு வரிகளை வசூல் செய்து கொண்டு இந்தக் கொடையினை நிகழ்த்துகிறார்கள்.



### முழுவரி

கணவன், மனைவி, குழந்தைகள் அடங்கிய ஒரு குடும்பத்திற்கு ரூபாய் 1000 விரியாக விதித்திருந்தால் இப்பணத்தை அக்குடும்பமே முழுமையாகச் செலுத்தியாக வேண்டும். இதனையே குடும்பவரி அல்லது முழுவரி என்று கூறுகிறார்கள். ஆவ்வூரைப் பூர்வீகமாகக் கொண்டவர்களிடம் மட்டுமே வரி வசூலிக்கப்படும்.

### தலைக்கட்டு வரி

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவியைத் தவிர்த்து அக்குடும்பத்தில் குறிப்பிட்ட வயதைக் கடந்து சம்பாதிக்கும் ஆண் பிள்ளைகள் இருந்தால் அவர்களும் வரி செலுத்த வேண்டும். இதனைத் தான் தலைக்கட்டு வரி என்று கூறுகின்றார்கள்.

### அரைவரி அல்லது கைம்பெண் வரி

கணவனை இழந்த கைம்பெண்களிடம் வரிப்பணத்தில் பாதி மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். இதுகைம்பெண் வரி அல்லது அரைவரி என்று கூறப்படுகின்றது.

### சீதனவரி அல்லது காணிக்கை

ஒரு குடும்பத்தில் திருமணமாகி அடுத்த குடும்பத்திற்குச் சென்ற பெண்களுக்கும் வரி விதிக்கப்படுகிறது. இதனைச் சீதனவரி அல்லது காணிக்கை என்று கூறுவார்கள். வரி எழுதிய நாளிலிருந்து கொடை விழா நடைபெறும் நாள் வரையுள்ள காலத்தில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பல செயல்கள் நிகழ்வதைக் காண முடிகிறது. கோடை விழா பற்றிய செய்தியை ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரியப்படுத்துவர். பெரும்பாலும் வீட்டிலிருந்து யாராவது ஒருவர் நேரடியாகச் சென்றே செய்தியைக் கூறி வருவர். வுரி எழுதியபின்பு, வரிக்காரர்கள் தங்களது வீடுகளைச் சுண்ணாம்பு அடித்து சுத்தம் செய்வர். குடும்பத்தில் சாமியாடுபவர்கள் விரதம் மேற்கொள்வதும், விரத நாட்களில் காலையிலும் மாலையிலும் குளிப்பதும் பச்சரிசியாலாகிய சாதத்தை உண்பதும் பழக்கமாக உள்ளது. சாமியாடுவோர் தீட்டு வீடுகளில் உணவு உண்பது இல்லை.

### விழாக்குழுவினர் செயல்

வரி எழுதும்பொழுதே எல்லாக் கோயில்களிலும் விழாக் குழுவை முடிவு செய்து விடுவார்கள். வில், கொட்டு (மேளம்), கும்பம் (கரகம்), பந்தல், கோயில் அலங்காரம், பூமாலை, ஒலி, ஒளி அமைப்பு ஆகிய கொடை தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பை இக்குழுவினரே ஏற்றுக் கொள்கின்றனர்.

### கோயிலைச் சுத்தம் செய்தல்

கோடையை முன்னிட்டு கோயிலைச் சுத்தம் செய்து வெள்ளை அடித்து சுற்றுச் சுவர்களுக்கு காவிப்பட்டை தீட்டுவர். கோயிலிலுள்ள மண் பீடங்களுக்கு வண்ணம் பீசியும் அழகுபடுத்துவர்.

## பந்நல் போடுதல்

கோயிலின் முன்பு காய்ந்த தென்னங்கீற்றால் கூரை வேய்ந்து பந்தல் அமைத்து உட்பகுதியில் தூய வெள்ளைத் துணியால் அழகுபடுத்தி ஓரங்களில் சிவப்புத் துணியால் ஆன குஞ்சங்களைத் தொங்க விட்டு அழகுபடுத்துவர்.

## துடிப்பான தெய்வங்களின் கொடை விழா

சுடலை, மாசானமுத்து, பலவேசம், தளவாய் மாடன், மாடசாமி, இசக்கியம்மன் போன்ற தெய்வங்கள் துடிப்பான தெய்வங்கள் என்றழைக்கப்படுகின்றன. இத்தெய்வங்களுக்குக் கொடைவிழா வியாழன் மாலை தொடங்கி சனிக்கிழமை மதியம் நிறைவடைவது வழக்கமாக உள்ளது.

## முதல்நாள் கொடை

வியாழக்கிழமை மாலை அவரவர் பூர்வீகக் கோயிலுக்குச் சென்று தீத்தம் எடுத்து வருவர். பூர்வீகக் கோயில் தொலைவில் இருந்தாலும் அங்கு சென்று தீர்த்தம் எடுத்து வருவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். போக்குவரத்து வசதி இல்லாதகாலத்தில் சாமியாடியும் விழாக் குழுவினரும் மாட்டு வண்டியில் சென்று தீத்தம் எடுத்து வந்தனர். போக்குவரத்து வசதி உள்ள இக்காலத்தில் பேருந்துகளிலும் சிற்றுந்துகளிலும் இரு சக்கர வண்டியிலும் சென்று பித்தளைக் குடங்களில் தீர்த்தம் எடுத்து வருகின்றனர். ஊர் எல்லைக்கு வந்ததும் தீர்த்தக் குடத்தை முதன்மைச் சாமியாடி தலையில் சுமந்தபடி மேளதாளத்துடன் கோயிலுக்குள் வருவார். தீத்தக் குடத்தை கோயிலுக்குள் இறக்கி வைத்துவிட்டு அவர் சாமியாடும்போது மற்ற சாமியாடிகளும் சாமியாட அப்போது மகுடம், கணியான் ஆட்டம் ஆகியவை நடைபெறும். கருக்கல் கொடை முடிந்ததும் வில்லுப்பாட்டுக்காரர் பாட்டுப்பாட ஆரம்பித்து இரவு 12 மணி வரை பாடுவர். கருக்கல் கொடையின்போது பீடங்களுக்கு ஒவ்வொரு பிச்சிப்பூ மாலையும் முதன்மைத் தெய்வத்திற்கு தோள்மாலையும் அணிவிக்கப்பட்டு பூசை செய்யப்படும்.

## இரண்டாம் நாள் கொடை

வெள்ளிக்கிழமை காலையில் தொடங்கும் கொடை மையப்பகுதி என்று அழைக்கப்படுகிறது. கோண்டு வந்த தீர்த்தத்தால் சாமி சிலைகளை நீராட்டி அலங்காரம் செய்து தேங்காய், பழம் படைப்பதும் தளவாய் மாடசாமிக்குத் தேங்காய், பழத்துடன் பலாப்பழமும் சேர்த்துப் படைப்பதும் வழக்கமாக உள்ளது. பலாப்பழத்துடன் இச்சாமி வந்ததால் பலாப்பழம் படைக்கப்படுவதாகக் கூறுகின்றனர். முதியக் கொடையில் சாமியாட்டம், கணியான் ஆட்டம், மகுடம் போன்றவை நடைபெறுகின்றன.

இரவு எட்டு மணிக்குமேல் நடைபெறும் சாமக்கொடையின்போது சாமிகளுக்குப் பூரண அலங்காரம் செய்யப்பட்டு பூசை நடைபெறும்



மேளத்திற்கு ஏற்றவாறு சாமியாட வில்லுப் சாமியாடிகள் மேளத்திற்கு ஏற்றவாறு சாமியாட வில்லுப் பாட்டுக்காரர்களும் பாட்டுப்பாடுவர். அப்போது பலியிடுதல் நடைபெறும். பலியிடப்பட்ட ஊர்க்கிடாவும், நேர்ச்சைக் கிடாக்களும் பலியிடப்படும். பலியிடப்பட்ட ஊர்க்கிடா சமைக்கப்பட்டு சாமிக்கு படைக்கப்படும். பொங்கலிட்டு, பொங்கல் பானையையும் சாமிக்கு முன் படைக்கப்படும். தொவளமறி பலியிடப்பட்டு, தொவளமறியின் ஈரல் வாழையிலையில் இசக்கியம்மனுக்கு மட்டுமே படைக்கப்படும். சாமியாடி கையில் ஈட்டி, திரளைச்சோறு, தீப்பந்தத்துடன் மயானம் சென்று விட்டு வந்தபின்னர் குளித்துவிட்டு மீண்டும் சாமியாடுவார். பேச்சியம்மனுக்கு அணக்கோழி படைக்கப்படுவதும் சாமியாடும் பெண் சாமியாடியே இதனைச் செய்வதும் வெள்ளாட்டுக் கிடாக்கள் கழுத்துப் பகுதியில் கத்தியால் கிழிக்கப்பட்டு சாமியாடிகள் உறுமம் சாப்பிடுவதும், சேவல் ஈட்டியில் குத்தப்படுவதும், சமைத்த அசைவ உணவை ஓலைப்பாயின்மீது மாத்து விரித்து அதில் படைப்பதும், வேக வைத்த முட்டைகளை வைத்து திரிகள் ஏற்றிப் பூசை செய்வதும் சில கோயில்களில் படையலுக்கு முன் கணியான் கைவெட்டு, நாக்குவெட்டு செய்து இரத்தத்தை வாழை இலைகளில் ஊற்றிப் படைப்பதும் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் நடைபெறுவதும் சாமைக்கொடையின் போது நிகழ்கின்றன.

## மூன்றாம் நாள் கொடை

சனிக்கிழமை காலையில் இறுதி நாள் கொடை நடைபெறுகிறது. சாமியாட்டம் நடைபெறுபோது சாமியாடி பக்தர்களுக்கு அருள்வாக்குக் கூறுவார். வில் நடைபெறுபோது சாமியாடி பக்தர்களுக்கு அருள்வாக்குக் கூறுவார். வில்லுப்பாட்டுக்காரர்கள் போன்ற கலைஞர்கள் வாழி பாடி தங்கள் ஊதியத்தைப் பெற்றுச் செல்வர். விழாக் குழுவினர் படையல் உணவையும், தேங்காய் பழங்களையும் வரிக்காரர்களுக்குப் பங்கு வைத்துக் கொடுப்பர்.

## இசக்கியம்மன் கொடை

பெண் தெய்வங்களில் இசக்கியம்மனுக்கு வெள்ளிக்கிழமை இரவு மட்டும் கொடை நடைபெறுகிறது. கோயிலுக்குள் கற்சிலையாக இசக்கியம்மனைத் தவிர ஓட்டால் செய்யப்பட்ட அம்மன் சிலைகளும் உள்ளன. கோடைவிழா அன்று காலையில் பழைய ஓட்டுச் சிலைகள் அகற்றப்பட்டு வெளியில் மரத்தடியில் மஞ்சள், குங்குமம், சந்தனம் ஆகியவற்றைப் போட்டுப் பூசை செய்து புதிய ஓட்டுச் சிலையை வைக்கின்றனர். அப்போது மூன்று முட்டைகளைச் சிலையைச் சுற்றி வீசி வெளியே வீசி எறிவர். இந்நிகழ்ச்சியை அம்மனுக்கு 'உறு ஏத்தல்' என்று கூறுவர். இரவில் அம்மனுக்கு பொங்கலிட்டு, சேவல்தரித்து, கிடா வெட்டி பலி கொடுப்பர். அம்மனுக்கு அசைவப் படையல் படைக்கப்பட்டு பூசை செய்யப்படும். அப்போது சாமியாட்டம் நடைபெறும். சுாமி கணக்குச் சொல்லும்போது, 'நீ நினைத்த காரியம் நிறைவேறினால் எனக்குக் கொடை கொடுக்க வேண்டும். உன்னுடைய காரியத்தை நான் முடித்துத் தருகிறேன்' என்று கூறுவார். துாங்கள் நினைத்த காரியம் நிறைவேறியவர்கள் அம்மனுக்குத் 'தனிக்கொடை'

கொடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். துனிக்கொடை என்பது அம்மனை வேண்டி ஒரு செயல் நிறைவேறினாலட நன்றிக்கடன் செலுத்தும் வகையில் குறிப்பிட்ட தனி நபர் மட்டும் தன்னுடைய சொந்த செலவில் கொடை கொடுப்பதாகும். பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் இசக்கியம்மனை வேண்டி, குழந்தை பெற்றால் சாமிக்குப் 'பிள்ளைத் தொட்டில்' வாங்கி நேர்த்திக்கடன் செலுத்துவதும் வழக்கத்தில் உள்ளது.

## எட்டாம் நாள் கொடை

கொடைவிழா முடிந்த எட்டாவது நாளில் எட்டாம் கொடை கொண்டாடப்படுகின்றது. இந்நிகழ்ச்சியை 'எச்சில் வாய் துடைத்தல்' என்றழைக்கின்றனர். ஒருநாள் மட்டும் கொண்டாடப்படும் இவ்விழாவில் நையாண்டி மேளம், கணியான் ஆட்டம், சாமியாட்டம் இடம்பெறும்.

## சாமியாட்டம்

சிறுதெய்வ வழிபாட்டின் முக்கிய நிகழ்ச்சியாகச் சாமியாட்டம் நடைபெறுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் கொடைவிழாவில் எல்லா தெய்வங்களுக்கும் சாமியாடுகின்றனர். சாமியாட்டம் என்ற நிகழ்ச்சி என்று தோன்றியது என்று வரையறுத்துக் கூற அயலாத தொன்மையுடையது. அருள் வந்து ஆடுதல், ஆவேசமுற்று ஆடுதல், சாமி வந்து ஆடுதல் என்று பல்வேறு பெயர்களில் தற்காலத்தில் குறிப்பிடப்படும் சாமியாட்டம் தொல்காப்பியத்தில் 'வெறியாட்டு' என்று குறிக்கப்பட்டுள்ளது.

*வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்*
*வெறியாட்டு அயர்ந்த காந்தளும்*
*(தொல் பொருள். நூ. 63)*

என்னும் நூற்பா காந்தள் மலரைச்சூடி வெறியாடியதைக் குறிப்பிடுகின்றது. கண்ணகி, கோவலன், கவுந்தி அடிகள் ஆகியோர் ஐயைக் கோட்டத்தில் இருந்தபோது எயினர் குலத்தைச் சேர்ந்த சாலினி தெய்வமுற்று ஆடியதை,

*'தெய்வம் உற்று மெய்ம்மயிர் நிறுத்த'(சிலம்பு. 12: 7-8)*

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

தெய்வங்களுக்குப் பூசை செய்யும்போது சாமியாட்டம் நிகழ்கிறது. மேளதாளம் முழங்க, மணி ஒலிக்க, கணியான் ஆட, பெண்கள் குரவையிட ஆவேசமுற்று சாமியாடுவர். சாமியாடி ஆடத்தொடங்கியதும் சந்தனம் பூசி, மாலைகள் அணிவித்து அருகில் இருக்கும் இளைஞர்கள் சாமியாடி கட்டியிருக்கும் வேட்டியை மேலே தூக்கிக் கட்டிஅதன்மேல் சல்லடமும் தலையில் தொப்பியும் அணிவிப்பர். மேளத்திற்கு ஏற்றவாறு சாமியாடி கணியானுடன் சேர்ந்து ஆடுவார். கையில் தீப்பந்தம், ஈட்டி, பிரம்பு போன்றவற்றை ஏந்தி ஆடும்போது நடுவில் மேளச் சத்தத்தை நிறுத்திவிட்டு பக்தர்களுக்குக் கணக்குச் சொல்வார். சாமக் கொடையின் போது பலியிடப்படும்



ஆட்டின் இரத்தத்தை உறுமம் சாப்பிடுவர். முதன்மைச் சாமியாடி மட்டுமே மயானம் சென்று திரும்புவார். இவ்வகைச் சாமியாட்டம் துடிப்பான தெய்வங்களுக்கு நடைபெறுவதாகும். அம்மன் போன்ற தெய்வங்களுக்குச் சாமியாடி வேப்பங்குழை, பிரம்பு போன்றவற்றைக் கையில் ஏந்தி ஆடுகின்றார். மஞ்சப்பால் குளித்தல், மஞ்சள் நீராடுதல் ஆகியனவும் சாமியாட்டத்தின்போது நிகழ்கின்றன. கணியான் ஆட்டமும், மகுடக்காரர்களின் பாட்டும் சாமியாடிகளுக்குச் சாமியை வரவழைக்கும் தன்மையில் முதலிடம் பெறுகின்றன.

## கணியான் ஆட்டம்

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளுள் ஒன்று கணியான் ஆட்டமாகும். திருநெல்வேலி மாவட்டச் சிறுதெய்வ வழிபாட்டில் கணியான் ஆட்டம் சிறப்புப் பெற்று விளங்குகிறது. கணியான் என்னும் தப்பை அடித்து ஆடுவதால் 'மகுடராட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது. சிறுதெய்வங்களான சுடலை, மாடன், மாசானமுத்து, பலவேசக்காரன்ஆகியவற்றின் கொடை விழாக்களின் போது இவ்வாட்டம் நடைபெறுகிறது. கணியான் ஆட்டத்தில் ஆண்கள் இருவர் பெண் வேடமிட்டு சாமியாடிகளுடன் ஆடுவர். குழுத் தலைவர் பாட்டுப்பாடி சாமியை வரவழைப்பார். சுாமி ஆடுவதற்குத் தயாராக இருக்கும் நிலையில் அவர்களுக்கு அருளை வரவழைக்க தலைவர் பாட்டுப்பாடுவார். துலைவரின் பாட்டும், தப்பின் தாளமும், கணியான் ஆட்டமும் சாமியாட்டத்தை உச்சநிலைக்குக் கொண்டு செல்கின்றன. கணியான் ஆட்டம் முக்கிய நிகழ்ச்சியாக அமைவது கைவெட்டு, நாக்கு வெட்டாகும். ஒத்தப்பனை சுடலை கோயில் கொடை விழாவின்போது கணியான் தன்னுடைய கை, நாக்கு ஆகியவற்றை வெட்டி சாமிக்குப் படையலிடுவதற்கு முன் வாழை இலையில் இரத்தத்தை ஊற்றுவான். சாமிக்கு வரி எழுதிய பின்பு கணியானுக்குச் செய்தியைக் கூறுவர். குறிப்பிட்ட நாளில் கொடைவிழா நடைபெறும் என்பதை அறிந்தவுடன் அன்றிலிருந்து கணியான் விரதம் இருந்து கொடை விழாவில் சாமக்கொடையின் போது கை, நாக்கு வெட்டச் செய்வது வழக்கமாக உள்ளது.